பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 06 2024 **TUESDAY** 6 30 **PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தலைவர் தேர்தலுக்கு தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திரு. ஓம் பிர்லா போட்டியிடுகிறார். எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சார்பில் திரு. கொடிக்குன்னில் சுரேஷ் நிறுத்தப்பட்டுள்ளார்.

2. தமிழகத்தைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர்கள் இன்று நாடாளுமன்றத்தில் பதவியேற்றுக் கொண்டனர்.

3. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க கோரி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

4. நீலகிரி கோவை மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சீன ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் கால்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>><<<<**

மக்களவைத் தலைவர் பதவிக்கு நாளை தேர்தல் நடக்கவுள்ள நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பாக திரு ஓம். பிர்லா வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா, திரு பியூஷ் கோயல் ஆகியோர் அவரை ஆதரிப்பது தொடர்பாக, எதிர்க்கட்சித் தலைவர்களுடன் இன்று ஆலோசனை நடத்தினர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு கே சி வேணுகோபால், மற்றும் திமுக-வின் மூத்த தலைவர் திரு டி ஆர் பாலு ஆகியோருடன் அவர்கள் ஆலோசனை மேற்கொண்டதில், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதனையடுத்து, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு கொடிக்குன்னில் சுரேஷ், எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

பிஜேபி-யின் நாடாளுமன்ற உறுப்பினரும், மக்களவை முன்னாள் தலைவருமான திரு ஓம். பிர்லா, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வேட்பாளர் திரு கொடிக்குன்னில் சுரேஷ் ஆகியோர் இன்று வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இந்த தேர்தல் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி, பிரதமரின் வேண்டுகோளின்படி, ஆக்கப்பூர்வமான முறையில் ஒத்துழைக்க எதிர்க்கட்சிகள் விரும்புவதாகவும், பாரம்பரிய முறைப்படி மக்களவை துணைத்தலைவர் பதவிக்கு காங்கிரஸ் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இதற்கிடையே, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியின் கூட்டம் இன்றிரவு 8 மணிக்கு புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் மக்களவைத் தலைவர் தேர்தல் குறித்த ஆலோசனைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் இரண்டாவது நாளாக இன்று பதவியேற்றுக் கொண்டனர்.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், ரேபரேலி மக்களவை உறுப்பினருமான திரு. ராகுல்காந்தி இன்று பதவியேற்றுக் கொண்டார்.

தமிழகத்தைச் சேர்ந்த திமுக, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் கட்சி உறுப்பினர்களும் இன்று பதவியேற்றனர்.

இடைக்கால அவைத்தலைவர் திரு. **Bhartruhari Mahtab** புதிய உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

**>>>><<<<**

நாகை மாவட்டத்தை சேர்ந்த பத்து மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினரால் இன்று கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் வாடும் தமிழக மீனவர்கள் 47 பேரையும், பிடித்து வைக்கப்பட்டுள்ள 166 படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை கடற்படையால் மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை தடுக்க, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

**>>>><<<<**

தமிழகத்தில் அடுத்த இரண்டாண்டுகளுக்குள் 75 ஆயிரம் அரசு காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று விதி 110-ன் கீழ் அவர் அளித்த அறிக்கையில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என்று தெரிவித்துள்ளார்.

தனியார் துறைகளிலும் ஏராளமான வேலைவாய்ப்புகள் உள்ளதாக கூறிய அவர், கடந்த மூன்றாண்டுகளில் 77 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ், தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறையின் மூலமாக நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

**>>>><<<<**

சாலை பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், தென்காசி, ஆற்காடு, போடிநாயக்கனூர், திருநெல்வேலி ஆகிய நான்கு நகரங்களுக்கு புறவழிச் சாலையும், ராஜபாளையம் நகரில் புதிய இணைப்புச்சாலை 321 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

**>>>><<<<**

மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளையின் மூலம், ராமேஸ்வரம் தீவில் சமூக அடிப்படையிலான சூழல் சுற்றுலா 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று வனத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தமது துறை மானிய கோரிக்கைமீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பறவை கண்காணிப்பு தளங்கள், கோதண்டராமர் கோவில் கழிமுகப் பகுதி மேம்பாடு ஆகியவை சூழல் சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தரம் உயர்த்தப்படும் என்று கூறினார்.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரவு வான்பூங்கா அமைக்கப்படும் என்றும் திரு. மதிவேந்தன் தெரிவித்தார்.

**>>>><<<<**

காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, புதுச்சேரியைச் சேர்ந்த உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிலுவையில் உள்ள 5 புள்ளி 367 டிஎம்சி தண்ணீரையும், ஜூலை மாதம் திறக்கவேண்டிய 31 புள்ளி இரண்டு நான்கு டிஎம்சி தண்ணீரையும் காவிரியிலிருந்து கர்நாடக அரசு திறந்து விடவேண்டும் என்று தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது.

>>>><<<<

கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி, தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவியை இன்று சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.

அந்த மனுவில் கள்ளக்குறிச்சி விஷச்சாராய சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

ஆளுநருடனான சந்திப்பின் போது அஇஅதிமுகவின் சட்டப்பேரவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் உடன் சென்றனர்.

இதனிடையே, கள்ளக்குறிச்சி விஷச்சாரய சம்பவம் தொடர்பாக, தமிழக அரசுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஒரு வார காலத்திற்குள் விரிவான அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழக அரசு தலைமைச்செயலாளர் மற்றும் காவல்துறை ஆணையருக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

>>>><<<<

நீலகிரி கோவை மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன்(1) 31 செகண்ட்ஸ்)

வங்கக்கடல் பகுதியில் நிலவும் மோசமான வானிலை காரணமாக, மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 27ஆம் தேதி ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் என்று ஆட்சியர் திரு. ஜி. லெட்சுமிபதி அறிவித்துள்ளார்.

>>>><<<<

2023-24ஆம் ஆண்டுக்கான மணிமேகலை விருதிற்கான விண்ணப்பங்கள் சமுதாய அமைப்புகளிடமிருந்து வரவேற்கப்படுவதாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

30 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பெண்களுக்கும் மார்பக புற்றுநோய்க்கான பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என அரியலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆனிமேரி ஸ்வர்ணா கேட்டுக் கொண்டுள்ளளார்.

>>>><<<<

மயிலாடுதுறை மாவட்டம், ஒருங்குமுறை விற்பனைக் கூட்டத்தில் நடைபெற்ற ஏலத்தில் பருத்தி குவிண்டாலுக்கு 7 ஆயிரத்து 777 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டதற்கு விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

>>>><<<<

முல்லைப்பெரியாறு அணைக்கான நீர்வரத்து 2 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

>>>><<<<

செங்கல்பட்டு மாவட்ட கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர்கள் விரைந்து செயல்படுவதற்கு ஏதுவாக புதிய வாகனங்களை, ஆட்சியர் திரு. எஸ். அருள்ராஜ் இன்று வழங்கினார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

சீன ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**Tianjin-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-2 என்ற செட்கணக்கில் தைவானின் **Bang Yin-**ஐ வென்றார்.

>>>><<<<

உலக டேபிள் டென்னிஸ் போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Diya Chitale** அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

துனிஷியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் தகுதிச்சுற்று ஆட்டத்தில் அவர் துனிஷியாவின் **Fadwa Garci-**வை 6-11, 11-5, 9-11, 11-6, 11-4 என்ற செட்கணக்கில் வென்றார்.

>>>><<<<

உலகக் கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் அரையிறுதிக்கு இந்தியா, இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

**>>>>end<<<<**